**OS NO;215/2010**
**Date:17.03.2020**
**Dw:1(cross continuation)**
**Name:கோகுல்ராவ்**
**Address:**

வாதிகள் தரப்பில் பி.வா.சா.1சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

என் தந்தையார் நாகேஷ்வரராவ் மறைவிற்கு பின்னர் நான் கூடுதல் பதிலுரை இந்த வழக்கில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். கூடுதல் பதிலுரை பதிவு செய்த போது ஆர்டர் 8 ரூல்1ஏன் படி 5ஆவணங்கள் தான் நான் குறியீடு செய்திருந்தேன் என்று சொன்னால் சரிதான், கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வேன் என்றும் குறிப்பிட்டுள்ளேன். நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யும் போதும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் 58 ஆவணங்களை எங்கள் தரப்பு சான்று ஆவணங்களாக தாக்கல் செய்வது பற்றி கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிந்த பிறகு பி.வா.சா.ஆ.59 முதல் பி.வா.சா.ஆ.73 ஆவணங்களை குறியீடு செய்துள்ள ஆவணங்களுக்கும், தாவாவில் கோரியுள்ள சொத்துக்களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்றால் வாதிகள் சில சொத்துக்களை விற்றது குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், இந்த வழக்கு பகுதியாக பாகப்பிரிவினை கோர முடியாது என்பதால் அதனை பூர்த்தி செய்வதற்காக மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நான் என் கூடுதல் பதிலுரையில் வாதிகள் சில சொத்துக்களை விற்றது குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், இந்த வழக்கு பகுதியாக பாகப்பிரிவினை கோர முடியாது என்பதால் அதனை பூர்த்தி செய்வதற்காக மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன என்ற விவரத்தை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். பாகப்பிரிவினை வழக்கில் வாதிகள் சில சொத்துக்களை விட்டு விட்டார்கள், அந்த சொத்துக்களை தாவாவில் சேர்க்க வேண்டும் என்று நான் எதுவும் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.59 ஆவணத்தை யார் விற்று இருக்கிறார்கள் என்று சொன்னாலும், ஆவணத்தில் உள்ள சொத்து எப்படி வந்தது என்று சொன்னாலும், வாதியின் உறவினர் கோவிந்தராஜ் என்பவர் 2008ல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக விற்றுள்ளார் என்பதால் அது குறித்து 1ம் பிரதிவாதி கேட்டதால் பி.வா.சா.ஆ.59 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது, மேற்படி ஆவணத்தில் உள்ள எங்கள் பூர்வீகச் சொத்தாகும், அதற்குரிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.60 ஆவணமான ஏ ரிஜிஸ்டர் படி உள்ள சர்வே எண்.243/6ல் பட்டா

தாரர் கோவிந்தநாயுடு மற்றும் மீராபாய் என்று கண்டுள்ளதா என்று சொன்னால் சரிதான், கோவிந்தநாயுடு என்பவர் என் தாத்தா ஆவார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.60 ஆவணத்தை 26.12.2019ல் தான் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் 1985ம் ஆண்டு தமிழ்நாடு அரசுக்குரிய நிலஉடமைபதிவேடு தயாரிக்கும் போது தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் தனிவட்டாட்சியர், உதவி இயக்குனர் நிலவரி திட்டம், ஆய்வாளர் அவர்களால் சரிபார்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ஆவணம் ஆகும். இதற்கு முன்னால் 243/6 என்ற சர்வே எண்ணில் கண்ட சொத்துக்கு என் தாத்தா கோவிந்தநாயுடு என்ற பெயரில் உண்டான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் உண்டு. நான் தாக்கல் செய்துள்ள 79 ஆவணங்களில் சர்வே எண்.243/6 என்ற எண்ணுக்குரிய எந்த ஆவணம் எந்த எண்ணாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் உள்ளது, ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். வருவாய் பதிவேடுகளில் ஒருவர் பெயரில் பத்து சொத்துக்கள் இருந்தால் அந்த பத்து சர்வே எண்களையும், ஒரே பட்டாவில் குறிப்பிட்டு தயார் செய்வார்கள் என்று சொன்னால் சரியல்ல, இரண்டு மூன்று பட்டாக்கள் கூட இருக்கலாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.65ல் முதல் பக்கத்தில் வரிசை எண்3ல் பட்டா எண்.778 அதன் உடமையாளர் பெயர் கோவிந்தநாயுடு என்று குறிப்பிட்டுள்ளது அவர் என் தாத்தாவா என்றால் என் தாத்தா தான். பி.வா.சா.ஆ.65ல் இரண்டாவது பக்கத்தில் பட்டா எண்.567ல் கோவிந்தநாயுடு பெயர் உள்ளதா என்றால் கோபால்நாயுடு மகன் கோவிந்தநாயுடு என்று கண்டுள்ளது. மேற்படி கோபால்நாயுடு மகன் கோவிந்தநாயுடு என் தாத்தாவா என்றால் என் தாத்தா இல்லை, பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.65ல் புஷ்பம்மாள் என்பவர் பெயரில் பட்டா எண்.650 என்ற எண் தாக்கல் ஆகி உள்ளது என்று சொன்னால் சரிதான், 38செண்டுக்கு மட்டும் தான் உள்ளது,மீதி உள்ள 198செண்டு கோவிந்தநாயுடுக்கு உள்ளது. புஷ்பம்மாள் என் தாத்தா கோவிந்தநாயுடுக்கு என்ன உறவு என்று சொன்னால் உறவே இல்லை. புஷ்பம்மாள் கணவர் பெயர் தெரியுமா என்றால் கோபால்நாயுடு ஆவார். புஷ்பம்மாள், கோவிந்தநாயுடுவின் இரண்டாம் மனைவிக்கு பிறந்த மகள் என்பதால் கோவிந்தநாயுடுவின் சகோதரி தான் புஷ்பம்மாள் என்பதை நான் மறுக்க முடியுமா என்றால் முடியாது. நிலஉடைமை பதிவேடு அலுவலர் போட்ட உத்தரவை 1987க்கு பின்னிட்டு மேல்முறையீடு செய்யவோ, அல்லது அதை தவறு என்று பிரகடனம் செய்யவோ நீதிமன்றத்தில் எங்கள் குடும்பத்தார் யாரும் வழக்கு போட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.71 ஆவணம் எதற்காக போடப்பட்டது என்று சொன்னால் வாதியும், வாதியின் உறவினர்களும் சம்பந்தப்பட்டதால் தாக்கல் செய்தேன். பி.வா.சா.ஆ.71 ஆவணத்தில் வாதியின்

பெயர் உள்ளதா என்றால் உள்ளது, சாந்தகுமாரியின் பெயர் சாட்சியாக உள்ளது. வாதியின் கணவர் ஜனார்த்தனன் மற்றும் அவர் சகோதரர்கள் பெயர்களும் உள்ளன அதனால் தான் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.71ல் கண்டுள்ள சொத்து, தாவா சொத்தில் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.71ல் என் தந்தை நாகேஷ்வரராவ் கையெழுத்து இட்டுள்ளாரா என்றால் இட்டுள்ளார். பி.வா.சா.ஆ.71 ஆவணத்தில் பக்கம் 3ல் பத்திரத்தில் கண்டுள்ள சொத்து ஜனார்த்தனன் குடும்பத்தாருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்று கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது, பாகப்பிரிவினை பத்திரம் எண் தவறு. பி.வா.சா.ஆ.59 லிருந்து பி.வா.சா.ஆ.73 வரைக்கும் உள்ள ஆவணங்களுக்கும், தாவாவில் உள்ள சொத்துக்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னாலும், நீதிமன்றத்தை குழப்புவதற்காகவும், திசை திருப்பும் நோக்கத்திற்காகவும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்று சொன்னாலும் சரியல்ல.

**(வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)**